**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**சாட்சிகளின் வாக்குமூலம்**

**(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை முறை சட்டம்)**

**அமர்வு வழக்கு எண். : 188/2024**

**நாள்: 15.12.2025**

**அரசு தரப்பு சாட்சி** : 13 (LW12)

2025ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 15ம் நாள் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | டாக்டர். ராஜமூர்த்தி | தொழில் | |
| தந்தை பெயர் | | சமயம் | |
| கிராமம் | | வயது | |
| தாலுகா | | | |

( எதிரி ஆஜர். )

<u>முதன்மை விசாரணை:</u>

நான் தற்போது முதுகுளத்தூர் மருத்துவமனையில் அறுவை சிகிச்சை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 19.11.2023ம் தேதி காலை 07.05 மணியளவில் நான் இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் பணியில் இருந்த போது, சுமார் 49 வயது மதிக்கத்தக்க முனியசாமி என்பவரை திருப்பாலைக்குடி சிறப்பு சார்பு ஆய்வாளர் முருகானந்தம் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு நான் அவரை பரிசோதித்தேன். அவரை பரிசோதிக்கும்போது, அவருக்கு இதய துடிப்பு எதுவும் இல்லை. அவர் மருத்துவமனைக்கு இறந்த நிலையில்



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.12.15 18:00:30 +0530

கொண்டுவரப்பட்டதாக விபத்துப்பதிவேடு பதிவு செய்தேன். நான் **பதிவு செய்த விபத்து பதிவேடு அ.த.சா.ஆ.11** ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது. இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

பொதுவாக விபத்து பதிவேட்டில் இறந்தவர்/காயமுற்றவரை 7 வது காலத்தில் யார் கொண்டு வருகிறார்களோ, எதன் மூலமாக கொண்டு வருகிறார் என்பதை எழுதுவோம் என்றால் அழைத்து வருபவர் அல்லது அவருடன் துணை இருப்பவர்களின் பெயரை குறிப்பிடுவோம்.. அ.த.சா.ஆ.11 ல் கொண்டுவந்தவர் என்ற காலத்தில் SSI முருகானந்தம், திருப்பாலைக்குடி என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் இறந்துபோன முனியசாமிக்கு வெளிப்புறக்காயங்கள் எதுவும் இருந்ததாக விபத்துப்பதிவேட்டில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான், பொதுவாக ஒரு நபர் இறந்த நிலையில் கொண்டுவரப்படும்போது, அவரது உடலில் இருக்கும் காயங்களை விபத்து பதிவேட்டில் குறிப்பிடப்படுவது இல்லை.

மறு விசாரணை – இல்லை.

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.12.15 18:00:33 +0530

முதன்மை அமர்வு நீதிபதி ,
இராமநாதபுரம் .